ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. பிரபவஹூ ஆடிமீ பகுதி ௭.
Vol 4. *July & August 1927.* No. 7.

திருமந்த்ரார்த்தாநுஸந்தானம்.

(56-ம் பக்கத்தொடர்ச்சி.)

(௧) ஸ்வரூபத்தோடு சேராத இதரபரிமாற்றங்கள் மேலிட்டால் ஸ்வரூபாநுரூபமான விர்த்தி கைங்கர்யமன்றோ என்று சதுர்த்தியில் அர்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

---

(௧) ஸ்வரூபத்தோடுசேராத என்பது எம்பெருமானுக்கு அடிமையாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்திற்குப் பொருந்தாத என்றவாறு. இதரபரிமாற்றங்கள் மேலிட்டால் என்பது யாதானுமோர் காரணம்பற்றி இதரர்கட்குப் பணிவிடைசெய்தொழுகுதல் ஸம்பவிக்குமாகில் என்றவாறு. ஸ்வரூபாநுரூபமான விர்த்தி கைங்கர்யமன்றோ என்பது ஆத்மஸ்வரூபத்திற்குப் பொருந்திய செயல் ஈசுவரவிஷயகைங்கர்யமன்றோ என்று கருதி என்றவாறு. சதுர்த்தியினர்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்பது ஆய என்ற நான்காம் வேற்றுமையின் பொருளைநினைத்து அப்பணிவிடைசெய்தொழுகுதலினின்றும் திரும்பக்கடவன் என்றவாறு. ஆய என்ற நான்காம் வேற்றுமையால் "சென்றாற்குடையாமிருந்தால் சிங்காசனமாம், நின்றால் மாவடியாம்நீள்கடலுள்- என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம்புல்கும், அணையாம்திருமாற்கரவு" என்றபடி திருவநந்தாழ்வான் (ஆதிசேஷன்) எல்லாத்தேசத்திலும் எல்லாக்காலத்திலும் எவ்வகையான நிலைமையிலும் எம்பெருமானுக்கு உசிதமான கைங்கர்யங்களைச் செய்வதுபோல அவன் விஷயமான எல்லாக் கைங்கர்யங்களையும் செய்யவேண்டுமென்ற பொருளுணரப்படும். இவ்வர்த்தத்தில் நினைவுண்டாகவே பிறர்க்கு அடிமைபூண்டொழுகலாகிய இயல்பகன்று எம்பெருமானுக்குக் கைங்கர்யஞ்செய்யவேண்டுமென்ற ஒழுக்கம் நிகழுமென்க.

(உ) இப்படி பரிஹரித்துக்கொள்ளாதபோது பிறர்க்கு உப தேசிக்கிறதிற்கும், இதில் தனக்குப்பிறந்த ஜ்ஞாநத்திற்கும் என்ன ப்ரயோஜனமுண்டென்று அநுஸந்திப்பான்.

(ஈ) ஸ்வபௌருஷத்தாலே தன் கார்யம்தான் நிர்வஹிப்ப தாக நினைத்தானாகில் அகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(ச) அந்யரை ரக்ஷகராக நினைத்தானாகில் உகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(உ) இப்படி பரிஹரித்துக்கொள்ளாதபோது என்பது ஆய என்ற நான்காம்வேற்றுமையின் அர்த்தத்தைநினைத்து அந்யருக்கடிமைபூண்டொழுகுதலை நிவர்த்தித்துக்கொள்ளாதபோது என்றவாறு. பிறர்க்கு உபதேசிக்கிற திற்கும், இதில் தனக்குப்பிறந்த ஜ்ஞாநத்திற்கும் என்ன பிரயோஜனமுண்டென்று அநுஸந்திப்பான் என்பது பிறர்க்கு அடிமைபூண்டொழுகுதலை ஒழித்துக்கொள்வதாகிய அநுஷ்டானமில்லாதபோது பிறர்க்குபதேசிக்கின்ற உபதேசத்தாலும், தனக்குப்பிறந்த ஜ்ஞாநத்தாலும் ஒருபிரயோஜனமில்லை யென்று நினைக்கக்கடவன் என்றவாறு. "ஞானமனுட்டானமிவை நன்றாகவே யுடைய, னனகுரு..........." என்றபடி உபதேசகர்த்தாவானவன் ஜ்ஞாநமநுஷ்டானமுடையவனாயிருத்தல்வேண்டும். இங்ஙனமில்லாதவிடத்துக்கேட்பவனுக்கு இவன்செய்த உபதேசத்தில் விசுவாசமுண்டாகாமையின் அவ்வுபதேசம் கார்யகரமாவதில்லையென்பார் பிறர்க்குபதேசிக்கிறதற்கு என்னபிரயோஜனமுண்டென்றார். ஜ்ஞாநத்திற்குப் பிரயோஜனம் ஒழுக்கமாதலால் அவ்வொழுக்கமில்லாதவிடத்து அந்தஜ்ஞாநத்தால் ஒருபிரயோஜனமுமில்லை என்பார் தனக்குப்பிறந்த ஜ்ஞாநத்திற்கு என்னபிரயோஜனமுண்டென்றார்.

(ஈ) ஸ்வபௌருஷத்தாலே தன் கார்யம் தான்நிர்வஹிப்பதாக நினைத்தானாகில் என்பது தன் புருஷத்தன்மையால் தன்னைக்காத்துக்கொள்வதாகிய செயலைத் தானேநிட்டுக்கொண்டு செய்வதாகக் கருதினானாகில் என்றவாறு. அகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்பது அகாரத்தின் பொருளைநினைத்து முன்னின்றநிலையினின்றும் அகலக்கடவன் என்றவாறு. அகாரம், அவ-ரக்ஷணே என்ற தாதுவினால் ஸர்வரக்ஷகனான எம்பெருமானை உணர்த்தும். இவ்வகாரார்த்தத்தின் நினைவுண்டானால் 'நம்ரக்ஷணம் நம்பாலில்லை' என்பது தன்னடைவே ஒழியுமென்க.

(ச) அந்யரை ரக்ஷகராக நினைத்தானாகில் என்பது எம்பெருமானை ஒழிந்த தேவதாந்தரங்களை ரக்ஷகராகக்கொள்வானாகில் என்றவாறு. உகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்பது எம்பெருமானை ஒழிந்தவர்கள் ரக்ஷகரல்லர் என்ற பொருளைக்குறிப்பிடுவதாகிய உகாரார்த்தத்தை நினைத்து

(ரு) ஸாதனத்திலே தனக்கந்வயமுண்டென்றும், ஸ்ரீவைஷ்ணவஸமயபுத்தியும் பண்ணினாகில் நமச்சப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(சு) ஈசுவர விபூதிபூதரோடே தனக்கு ராகத்வேஷம் நடையாடிற்றாகில் நாரசப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

மீளுவான் என்றவாறு. உகாரம் அந்யருக்கு அடிமையன்றென்ற பொருளையன்றோ சுட்டியுணர்த்தும். அங்ஙனமிருக்க அது அந்யாக்ஷகத்வநிவர்த்தியைக் குறிப்பிடுமென்றது பொருந்துமோவெனின்? யாண்டு அந்யாக்ஷகத்வபத்தியுண்டு ஆண்டு அந்யசேஷத்வமுண்டு என்ற நியமங்காணப்படுதலின் அக்கார்யரூப அந்யசேஷத்வத்தை நிவர்த்திக்கவே அதன் காரணமான அந்யாக்ஷகத்வபுத்தியும் நிவர்த்திக்கப்பட்டதாமாதலால் பொருந்துமென்க. இவ்வர்த்தம் இவ்வுகாரத்தின் விவரணமான நமப்பதத்தில் தெளிவாக விளங்கும்.

(ரு) ஸாதனத்திலே தனக்கந்வயமுண்டென்றும் என்பது தனது ஸ்வீகாரமுள்ளவிடத்தே (அவனையேஉபாயமாகப்பற்றியவிடத்தே) ஈசுவரன் உபாயமாகவிருந்து இஷ்டப்ராப்தி அநிஷ்ட நிவர்த்திரூப கார்யத்தைச் செய்கின்றானென்ற புத்திநிகழ்ந்தவிடத்து என்றவாறு. ஸ்ரீவைஷ்ணவஸமயபுத்தியும் பண்ணினாகில் என்பது ஸ்ரீவைஷ்ணவர்களாகிய அடியவர்கள் 'நம்போன்ற மனுஷ்யராவார்.' என்ற ஸமபுத்திசெய்தானாகில் என்றவாறு. நமச்சப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்பது நம: என்பதன் பொருளை நினைத்து முன்னின்ற நிலையினின்றும் ஒழியக்கடவன் என்றவாறு. நம: என்பது ந + ம: என்று இரண்டு பதமாய் எனக்குரியனல்லேன் என்ற பொருளைச்சுட்டியுணர்த்தும். எனக்குரியனல்லேன் என்ற ஸ்வாதந்தர்யம் அகன்றபோது தன்ரக்ஷணத்தில் தனக்கோர் பற்றுதல் ஒழியும். இப்பற்றுதல் ஒழியவே ஈசுவரன்கைபார்த்திருப்பதாகிய பாரதந்தர்யம்ஸித்திக்கும். அதன்பின் அவனே உபாயமாவான் என்ற உணர்ச்சிபிறக்கும். மேலும், அவனடியவராகிய பாகவதர்கட்கும் அடிமையாயிருத்தல்வேண்டும் என்பதும் நமப்பதத்தின் அர்த்தபலத்தாலே கொள்ளத்தக்க பொருளாகும். இந்த நமப்பதார்த்தத்தின் அநுஸந்தானம் உண்டாகுமானால் எம்பெருமானே உபாயமாவான் என்ற ப்ரதிபத்தியும், அவனடியார்கள் ஸ்வாமியாவார் என்ற ப்ரதிபத்தியும் தோன்றுமென்க.

(சு) ஈசுவர விபூதிபூதரோடே தனக்கு ராகத்வேஷம் நடையாடிற்றாகில் என்பது ஈசுவர விபூதியாகிய உலகத்தில் வாழுகின்ற ஜீவவர்க்கங்களிடத்தில் தனக்கு விருப்பு வெறுப்புத்தோன்றுமானால் என்றவாறு. நாரசப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்பது நார என்பதன் பதப்பொருளைநினைத்து முன்னின்றநிலையினின்றும் நீங்கக்கடவனென்றவாறு.

(ஏ) ஔபாதிக பந்துக்கள் பக்கலிலே பந்துத்வ ப்ரதிபத்தி பண்ணினுகில் அயநசப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

(அ) புத்ர பசுவந்நாதி தொடக்கமாக ஸ்வர்க்கைசுவர்யம் நடுவாக கைவல்யம் முடிவாகவுண்டானவற்றில் புருஷார்த்த புத்தி பிறந்ததாகில் சதுர்த்தியின் அர்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

நாரம் என்ற சொல்அழிவில்லாத நித்யப்பொருள்களின் கூட்டத்தை உணர்த்தும். இந்த நித்யவஸ்துக்களுக்கெல்லாம் எம்பெருமான் ஆதாரமாக விளங்குகின்றான். ஆகவே உலகில் காணப்பட்ட எல்லாப்பொருள்களும் அவன் ஸம்பந்தமுடையனவாகும். இங்ஙனம் எல்லாம் அவன் ஸம்பந்தமுடைய பொருள்களாம் என்ற அர்த்தத்தை அநுஸந்திக்கவே சிலரிடத்தில் விருப்பும் வெறுப்புங்கொள்கிற வேறு பாடகலுமென்க.

(ஏ) ஔபாதிக பந்துக்கள் பக்கலிலே பந்துத்வ ப்ரதிபத்தி பண்ணினுகில் என்பது யாதானுமோர் காரணம்பற்றிவந்த தாய்தந்தையர் முதலிய உறவினரிடத்தில் 'இவர்களே நிலைநின்ற உறவினராவார்' என்ற புத்தி பண்ணினுகில் என்றவாறு. அயநசப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்பது அயநம் என்பதன்சொற்பொருளைநினைத்து முன்னின்றநிலையினின்றும் மீளக்கடவன் என்றவாறு. ஸர்வேசுவரன் நித்ய வஸ்துக்களாகிய எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாயிருக்கின்றான். இங்ஙனமிருக்கின்ற இவனே நிலைநின்ற ஸர்வவிதமான பந்துவாவான் என்ற பொருளை அயநம் என்ற சொல் குறிப்பிடும். இப்பொருளின் அநுஸந்தானமுண்டானுல் யாதானுமோர் காரணத்தால் இடையில்வந்துதோன்றி மாய்ந்தொழிகின்ற பந்துக்களே பந்துக்களாவார் என்று கொள்கிற உணர்வொழியுமென்க.

(அ) புத்ர பசுவந்நாதி தொடக்கமாக என்றது புத்ரன், பசு, அன்னம், வீடு என்பன முதலாகச் சொல்லப்படும் இஹலோக ஐசுவர்யம் முதலாக என்றவாறு. ஸ்வர்க்கைசுவர்யம் நடுவாக என்பது ஸ்வர்க்கலோகப் பிராப்தி இடையாக என்றவாறு. கைவல்யம் முடிவாக உண்டானவற்றில் புருஷார்த்த புத்திபிறந்ததாகில் என்பது ஆத்மாநுபவம் முடிவாகவிருக்கின்ற இவைகளே புருஷார்த்தங்களாம் என்ற உணர்வுதோன்றுமானுல் என்றவாறு. சதுர்த்தியின் அர்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான் என்பது ஆய என்ற நான்காம் வேற்றுமையின் பொருளைநினைத்து முன்னின்றநிலையினின்றும் ஒழியக்கடவன் என்றவாறு. ஆய என்ற நான்காம்வேற்றுமை ஈசுவரவிஷய கைங்கர்யமே நிலைநின்ற புருஷார்த்தமாம் என்ற பொருளைத்தெரிவிக்கும். இப்பொருளுணர்ச்சியுண்டானுல் ஈசுவரவிஷய கைங்கர்யத்தை ஒழிந்தவையெல்லாம் அபுருஷார்த்தங்களாம் என்ற தெளிவு பிறக்குமென்க.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(124-ம் பக்கத்தொடர்ச்சி.)

(உ) யக்ஷ:- केनस्विच्छ्रोत्रियो भवति केनस्विद्विन्दते महत् ।
केनस्विद्द्वितीयवान्भवति राजन्केन च बुद्धिमान् ॥

கேநஸ்வித் சோத்ரியோபவ்தி கேநஸ்விந்விந்ததேமஹத்
கேநஸ்வித் த்விதீயவாந்பவதி ராஜந்கேநச புத்திமாந்

(இ-ள்) எதனுல் சுரோத்ரியனுகிருன். எதனுல் பெருமையை அறிகிருன். எதனுல் இரண்டாவதையுடையவனுகிருன். எதனுல் அறிஞனுகிருன் என்பதாம்.

தர்ம:- श्रुतेन श्रोत्रियो भवति तपसा विन्दते महत् ।
धृत्या द्वितीयवान्भवति बुद्धिमान्वृद्धसेवया ॥

ச்ருதேந ச்ரோத்ரியோபவதி தபஸாவிந்ததேமஹத்
த்ருத்யா த்விதீயவாந்பவதி புத்திமாந் வ்ருத்தஸேவயா

(இ-ள்) 5, கேட்பதனுல் சுரோத்ரியனுகிருன். 6, தவத்தால்

(உ) இனி, ஜீவன் பரமாத்மாவையடைந்து அவனைவிட்டகலாது நித்யாநந்தத்தையநுபவிப்பதற்கு வேதம் எவ்வாறு சாதனமாம் என்பதுரைக்கப் படுகிறது.

(5) ச்ரோத்திரியன் — வேதாத்யயனஞ்செய்தவன். கேட்டலாவது:— நல்ல ஆசார்யன்பாற்சென்று வேதார்த்தங்களை ஐயந்திரிபறக் கேட்பதாம். இவ்வாறு வேதார்த்தங்களைக் கேட்டபின்னரே அதை ஓதியதாலாய பயனையடைகிருனுதலால் இங்குக் 'கேட்பதனுல் ச்ரோத்திரியனுகிருன்' என்று சொல்லப்பட்டது.

(6) இங்குத் தபசு என்பது ஆராய்ச்சியினுலுண்டாகிய நிச்சய உணர்வை உணர்த்தும். பெருமை என்றது பிர்ம்மவஸ்துவை. வேதார்த்தத்தைக் கேட்டபின் ஒருநிலைப்பட்ட மனத்துடன் அதனர்த்தத்தைச் சிந்தித்து அதனுல் பரமாத்மாவிஷயமான நிச்சயபுத்தியைப் பெறுவானுதலால் இங்குத் 'தபசினுல் பெருமையையறிகிருன்' என்றுரைக்கப்பட்டது.

பெருமையை அறிகிறான். 7, த்ருதியினால் இரண்டாவதையுடைய வனாகிறான். 8, பெரியாரைப் போற்றுவதினால் அறிஞனாகிறான். (எ-று).

(௩) யக்ஷ:;- 𑌕𑌿𑌂𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑍍𑌵𑌂 𑌕𑌶𑍍𑌚 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌤𑌾𑌮𑌿𑌵 ।
𑌕𑌶𑍍𑌚𑍈𑌷𑌾𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑍋𑌭𑌾𑌵𑌃 𑌕𑌿𑌮𑍇𑌷𑌾𑌮𑌸𑌤𑌾𑌮𑌿𑌵 ॥

கிம்ப்ராஹ்மணாநாம் தேவத்வம் கச்ச தர்ம: ஸதாமிவ
கச்சைஷாம் மாநுஷோபாவ: கிமேஷாமஸதாமிவ.

(இ-ள்) பிராம்மணர்களுக்குத் தெய்வத்தன்மையாவது எது? இவர்களுள் ஸத்துக்களுடைய தர்மம் எது? இவர்களுக்கு மானுஷ பாவமானது எத்தன்மையது? இவர்களுள் அஸத்துக்களுடைய தர்மம் எது? (எ-று.)

---

(7) த்ருதி என்றது நிலைபெற்ற சமாதியைக் குறிக்கும். இரண்டாவது என்றது ஜீவாத்மா, பரமாத்மா என்று எண்ணுகிற முறையில் இரண்டாவதாக எண்ணப்படுகிற பரமாத்மாவை உணர்த்தும். வேதார்த்தத்தைக்கேட்டு ஆராய்ந்து அதனால் பரமாத்மாவின் விஷயமான நிச்சய உணர்வுபெற்றவன் அவனையிடைவிடாது பாவனைசெய்வதால் தலைமையற்றவனும் ப்ரக்ருதி வசப்பட்டவனுமிருக்கின்ற தன்னைக்காட்டிலும் வேறும் வித்யையினாலடையப்படுபவனுமுள்ள பரமாத்மாவை அடைகிறானதலால் இங்கு த்ருதியினால் இரண்டாவதையடைகிறான் என்று சொல்லப்பட்டது.

(8) பெரியாரென்றது தத்வார்த்தங்களை உபதேசிக்கின்ற ஆசார்யனை. முன்னர்க் கூறியபடி வேதார்த்தங்களைக்கேட்டுச் சிந்தித்துப் பாவனைசெய்வதாகிய இவை ஸித்திக்கவேண்டுமானால் ஆசார்யாநுக்ரஹத்தாலன்றிக் கைகூடாதாதலால் இங்குப் பெரியாரைப் போற்றுவதால் அறிஞனாகிறான் என்றுரைக்கப்பட்டது.

இங்கு, "ஆத்மா அறியத்தக்கவனும், கேட்கத்தக்கவனும், சிந்திக்கத் தக்கவனும், பாவனைசெய்யத்தக்கவனுமிருக்கின்றானதலால் ஆசார்யனை யடைந்தவன் அதை யறிகிறான்" என்று வேதத்திற்கூறியபடி முன் மூன்று விடைகளால் சிரவண மனன நிதித்யாஸநங்களும், நான்காவது விடையால் நல்ல ஆசார்யனையடைதலும் ஆத்மஜ்ஞாநத்திற்குச் சாதனங்களாகச் சொல்லப்பட்டன. இதனால் வேதம் சிரவண மனன நிதித்யாஸநம் என்ற இவைகளின் வாயிலாகப் பரமாத்மாவை அறிதற்குச் சாதனமாகின்றதினால் முமுக்ஷுவான ஜீவன் நல்ல ஆசார்யனையடைந்து அவனது உபதேசத்தால் இதை மேற்கொள்ளவேண்டுமென்பது பெறப்படும்.

(௩) இனி, வேதார்த்தங்களைக் கேட்டற்குரியராவார் இவரென்பதுரைக்கப்படுகிறது.

தர்ம:- 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌏𑌷𑌾𑌂 𑌦𑍈𑌵𑌤𑍍𑌵𑌂 𑌤𑌪 𑌏𑌷𑌾𑌂 𑌸𑌤𑌾𑌮𑌿𑌵 ।
𑌮𑌰𑌣𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑍋 𑌭𑌾𑌵𑌃 𑌪𑌰𑌿𑌵𑌾𑌦𑍋𑌽𑌸𑌤𑌾𑌮𑌿𑌵 ॥

ஸ்வாத்பாய ஏஷாம் தேவத்வம் தபஏஷாம் ஸதாமிவ
மரணம் மாநுஷோபாவ: பரிவாதோz ஸதாமிவ.

(இ-ள்) 9, பிராம்மணர்கட்குத் தெய்வத்தன்மையாவது வேதாத்யபனமாம். 10, இவர்களுள் ஸத்துக்களுடைய தர்மமாவது தவமாம். 11, இவர்களுக்கு மானுஷபாவம் மரணம். 12, இவர்களுள் அஸத்துக்களுடைய தர்மமாவது பரிவாதம். (எ-று)

தொடரும்.

---

(9) தெய்வத்தன்மையாவது:— மோக்ஷத்தையடைவிப்பது எதுவோ? அதுவாம். வேதார்த்தங்களைக்கேட்டல், நினைத்தல், பாவனைசெய்தல் என்ற சாதனங்களைப்பெற்று மோக்ஷத்தையடைதற்கு மூலகாரணமாயிருப்பது உயிர்குடிபிறப்பும் வேதாத்யயனமுமாதலால் இங்குப் பிராம்மணர்கட்குத் தெய்வத்தன்மை வேதாத்யயனமாம் என்று சொல்லப்பட்டது.

(10) இங்குத் தவம் என்பது சமதமம் முதலிய குணங்களையும், நல்லொழுக்கத்தையும் உணர்த்தும், உயர்குடியிற்பிறந்துவேதாத்யயனஞ்செய்த பலருள்ளும் ஒரு சிலரே சமதமாதி குணங்களையும், நல்லொழுக்கத்தையுமுடையவராயிருப்பாராதலால் இங்கு இவர்களுள் ஸத்துக்களுடைய தர்மம் தவமாம் என்றுரைக்கப்பட்டது.

(11) மானுஷபாவமாமது:— சரீர முதலியவற்றிலுண்டாம் இருவகைப் பற்றுக்களாம். இங்கு மரணம் என்பதற்கு மரணத்தைப் பயப்பது என்று பொருள்கொள்ளத்தக்கது. உயர்குடியிற்பிறந்தவிடத்தும் தானல்லாதவுடம்பை யானென்றும் தன்னுடைமையில்லாதபொருளை எனதென்றுங் கருதுகிற இருவகைப்பற்றிருக்குமாகில் அவை, “அவாவென்பவெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவாப்பிறப்பீனும் வித்து” என்றபடி ஜன்ம மரணங்கட்கு ஹேதுவாமாதலால் இங்கு இவர்கட்கு மானுஷபாவம் மரணம் என்று சொல்லப்பட்டது.

(12) பரிவாதமாவது:— தேவர் பிராம்மணர் முதலியோரைத் தூஷித்தலும், தீயவொழுக்கமுமாம். உயர்குடிப்பிறந்தோன் ஸத்துக்களுடைய தர்மத்தை மேற்கொண்டொழுகாமல் ஆற்றைக்கடக்கக்கொடுத்த தெப்பத்தைக்கொண்டு அதைக்கடக்காமல் ஆற்றின்வழியேசென்று கடலிற் புகுவது போல இவன் பிறப்பின் பயனையடையாமல் தீயவொழுக்கத்தை மேற்கொண்டு கேடடைதல் அஸத்துக்களுடைய தர்மமாதலால் இங்கு அஸத்துக்களுடைய தர்மம் பரிவாதம் என்றுரைக்கப்பட்டது. இதனால் உயிர்குடிப்பிறப்பும், வேதாத்யயனமும், சமதம முதலிய நற்குணங்களுமுடையவராய் இருவகைப்பற்றையும் தீய ஒழுக்கத்தையும் ஒழித்தவரோ வேதார்த்தத்தைக் கேட்டற்குரியவராவாரென்பது பெறப்படும்.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

ஆசார்யன்.

ஸம்ஸ்காரபூர்வகமாக (திருவாழிசங்கங்களை வேத ஹோமத்தீயில் வாட்டி தோள் மூலங்களிலிடுதல் முன்னாக) திருமந்த்ரம், த்வயம், சரமசுலோகம் என்ற மூன்று ரஹஸ்யங்களையும் அர்த்தத்தோடு உபதேசிக்கின்றவனே ஆசார்யனாவான். இவன் உயர்குடியிற் பிறந்தவனாய், உபயவேதாந்தங்களின் (ஸம்ஸ்க்ருதவேதம் திராவிடவேதம் என்ற இவைகளின்) தாத்பர்யங்களை நன்கறிந்து அறிந்தபடியே அநுஷ்டிக்கும் இயல்புடையனாய், சிஷ்யனுடைய அபிப்ராயத்தையறிந்து அவனுடைய ஸம்சயங்களைப் போக்கவல்ல உபதேசஸாமர்த்யத்தையுடையவனாய், தன்னுடைய சிஷ்யனையும் ஜ்ஞாநாநுஷ்டானமுடையவனாக்கும் ஆற்றலுடையவனாயிருத்தல்வேண்டும்.

மேலும் இவ்வாசார்யன் உஜ்ஜீவிக்கவேண்டுமென்ற விருப்புடன் தன்னைத்தஞ்சமாகப்பற்றிய சிஷ்யனுக்கு உபதேசிக்கின்ற காலத்தில் தன்னுடைய ஆசார்யனை இவனுக்கு ஆசார்யனாகவும் தான் அவ்வாசார்யனுக்கு அவயவஸ்தானமாகவும் கருதி 'இவ்வாத்மா எம்பெருமானுக்கடிமைபட்டின்புறவேண்டும்' என்ற நல்ல நோக்கத்துடன் உபதேசிக்கவேண்டும். இவ்வாறன்றி 'இவன் நமக்குச் சிஷ்யனாவான்; நாம் இவனுக்கு ஆசார்யனாவோம்' என்று கருதி, சிஷ்யனிடத்தில் பொருள் முதலிய த்ருஷ்டப்பிரயோஜனத்தைப்பெறுகிற அவாவுடன் உபதேசிக்கலாகாது. இவ்வாசார்யன் தன்னை ஆசார்யனாக நினைத்துக்கொள்ளலாகாது என்றால் இவனுக்கு ஆசார்யனாயிருக்குந்தன்மை இல்லையோவென்னில்; ஈசுவரன் நினைவால் இவனுக்கு ஆசார்யனாயிருக்குந்தன்மையுண்டென்க. எவ்வாறெனின்; 'இவன் தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் உள்ளபடியறிந்து உபதேசிக்கும் பக்குவமுடையவனாகவிருக்கின்றான்; ஆகலால் இவனை இவனுக்கு ஆசார்யனாக்கக்கடவன்' என்று ஸர்வேசுவரன் நினைப்பிட்டருளுகையால் இவனுக்கு ஆசார்யனாயிருக்குந்தன்மை ஸித்திக்குமென்றறியத்தக்கது.

இதனிற்; "ஆசார்யன் சிச்சனுருயிரைப்பேணும்........" என்றபடி சிஷ்யனுடைய ஆத்மா கடத்தேறுதற்குரிய மார்க்கத்தைத் தேடிவதும் ஆசார்யனுக்குரிய பணியாகும். இதுவிஷயத்தைக் குறித்து இங்கு ஓர் ஐதிஹ்ய முரைக்கப்படும். அதுவருமாறு:—

உயர்குடிப்பிறப்பினலும், ஜ்ஞாநாநுஷ்டானங்களாலும் மிகவும் சிறந்தவரான பிள்ளைப்பிள்ளையாழ்வான் என்பவர் கூரத்தாழ்வானை ஆசார்யனாகக்கொண்டு அவரிடத்தில் பேரன்புபூண்டொழுகி வந்தார். கூரத்தாழ்வானும் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களைக் கண்டு இவரிடத்தில் மிகவும் உகப்புடையவராயிருந்தார். இஃதின்னமிருக்க இவர் 'நாம் உயர்குடியிற்பிறந்துளோம்' என்ற பேரபிமானத்தின் வாஸனைபால் எம்பெருமானுடைய மெய்யடியார்கள் விஷயத்தில் உதாசினத்தால் வணங்குதல் முதலிய வழிபாடின்றி வர்த்தித்துவந்தார். இவரது நிலைகண்ட கூரத்தாழ்வான் 'அந்தோ! என்செய்வது. 'பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஜ்ஞாநாநுஷ்டானங்களில் ஓர் குறைவில்லை; இங்ஙனமிருந்தும் பாகவதவிஷயத்தில் உதாசினமுற்று வர்த்திக்கின்றனரே; இந்தப் பாகவதாபசாரம் இவரது ஜ்ஞாநாநுஷ்டானங்களைக் கீழ்ப்படுத்தி ஆத்மவிநாசத்தையும் விளைவித்துவிடுமே; இவரது ஆத்மா உய்யும்வண்ணம் செய்வதும் நமது கடமையாகும். ஆனபின்பு இவருக்குப் பாகவதாபசாரம் புகாதிருப்பதற்கு ஓர் வேலி கட்டிவைக்கவேண்டும்' என்று திருவுள்ளங்கொண்டு சந்தர்ப்பம்வர்ய்க்கும்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

ஒரு அபநதினத்தன்று கூரத்தாழ்வான் ஆற்றுக்கெழுந்தருளுகிறகாலத்தில் அவருடன் பிள்ளைப்பிள்ளையாழ்வானும் சென்றார். கூரத்தாழ்வான் நீராடி ஸந்தியாவந்தனாதி கார்யங்களை முடித்துக்கொண்டு கரையில் எழுந்தருளியிருந்தார். அபநதினமாதலால் பலர் அவ்விடத்தில் பலதானங்கள் வழங்கிக்கொண்டிருந்தனர். அப்பொழுது கூரத்தாழ்வான் பிள்ளைப்பிள்ளையாழ்வானை நோக்கி, ஆழ்வானே! இன்று எல்லோரும் தானம் வழங்குகிறகாலத்தில் நீர் நமக்கொரு தானம் வழங்கமாட்டீரோ என்று கேட்டார். பிள்ளைப்பிள்ளையாழ்வான் தேவரீர் அடியேனை அடிமைப்பொருளாகத் திருவுள்ளம்

பற்றிய காலந்தொட்டு அடியேனிடத்திலுள்ளவை எல்லாம் தேவரீருக்கே உரிமையாய்விட்டனவன்றோ! ஆதலால் அடியேனுக்கு ஸ்வதந்தரமாகவிருக்கின்ற பொருள் யாதுளது? அங்ஙனமிருக்கத் தேவரீருக்கு எதைத் தானஞ்செய்யப்போகிறேன் என்றார். கூரத்தாழ்வான் நீர் இப்பொழுது ஸ்வதந்தரமாகக் கையாண்டு வருகிற பொருளொன்றுளது. அஃதாவது:— பாகவதாபசாரம் என்பதாம். அதை இனி மனம் வாக்குக்காயம் என்ற மூன்றுகாரணங்களாலும் செய்வதில்லையென்று இப்பொழுது உதகபூர்வகமாகத் தானஞ்செய்து தரக்கடவீர் என்று கேட்டார். பிள்ளைப்பிள்ளையாழ்வானும் அவ்வாறே தானஞ்செய்துகொடுத்தார். அதன்பின் இவ்விருவரும் தத்தம் திருமாளிகைக்கு எழுந்தருளினர்.

அதன்மேல் பிள்ளைப்பிள்ளையாழ்வான் பூர்வ வாஸனையால் ஒரு பாகவத தோஷத்தை நினைத்தனர். அப்பொழுது அவர் தமக்குள் 'அந்தோ! இனி நாம் முடிந்தொழிந்தோம்; என்செய்வ'தென்று மிகுந்த துக்கமுடையவராய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டு கண் வளர்ந்தார். இஃதிங்ஙனமிருக்கக் கூரத்தாழ்வான் 'பிள்ளைப்பிள்ளையாழ்வான் தினந்தோறும் தப்பாமல்வந்து நல்ல விஷயங்களைக் கேட்டுக்கொண்டு செல்பவர் இன்று நெடுநேரமாகியும் அவர் வரவில்லையே; காரணம் யாதோ? தெரியவில்லை' என்று பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகைக்குவந்து கதவைத்திறக்கும்படிசெய்து அவர் துக்கக்கடலிலழுந்திக்கிடக்கும் நிலைமையைக்கண்டு 'நீர் இப்பொழுது இவ்வளவு சோகமுறுதற்குக் காரணம் யாது?' என்று வினவினார். பிள்ளைப்பிள்ளையாழ்வான் தாம் மனத்தினால் நினைத்ததை விண்ணப்பஞ்செய்து அவருடைய திருவடிகளைப்பிடித்துக்கொண்டு 'ஸ்வாமி! மூன்று கரணங்களாலும் பாகவதாபசாரம் புகாதபடி இத்தேகத்தோடு வர்த்திப்பது அரிதாகவிருக்கிறது; இனி என் செய்வேன்' என்று வருந்தினார். கூரத்தாழ்வான் இவருக்கு இத்தனை அநுதாபம் வரப்பெற்றோமே என்று மிகவும் உகப்புடையவராய் அவரைநோக்கி மனத்தினால் நினைத்த அபசாரத்திற்கு அநுதாபமுண்டாகவே ஈசுவரன் பொறுத்தருள்வான். காயிகத்தால் அபசாரப்படலாகாது. இவை இரண்டும் உமக்கொழியும்படி செய்தோம்.

இனி நீர் வாக்கினால் அபசாரப்படாமல் ஜாக்ரதையாக வர்த்திப்பீராக என்று அருளிச்செய்தார். அவரும் அன்றுமுதல் மௌனியாக வர்த்தித்துவந்தார். இதனால், ஆசார்யன் சிஷ்யனுடைய உயிரைப் பேணுதற்குக் கடமைப்பட்டவனாவானென்பது பெறப்பட்டது.

ஆப்தன்.

வஞ்சனையற்றவுள்ளமும், உண்மையுரைத்தற்கு ஹேதுவாகிய யதார்த்த ஜ்ஞாநவிசேஷமுடையவன் எவனோ அவனே ஆப்தனாவான். இவ்வாப்தனுடைய வாக்யம் வேதப்ரமாணத்திற்கு ஒப்பாக மதிக்கப்படும். வஞ்சனையற்றவுள்ளமில்லாது, யதார்த்த ஜ்ஞாநமாத்ரமுடையவனும் ஆப்தனாகான். ஏனென்றால் அவன் கரந்தவுள்ளத்தினால் உண்மையான பொருளைமறைத்தும் ஒரு பிரயோஜனத்தைக்கருதி இல்லாததை ஏறிட்டுங் கூறிவிடுவான். ஆதலால் இவனுரைப்பவை கேட்பவனுக்கு உறுதிபயக்கமாட்டாவென்க. யதார்த்த ஜ்ஞாநமில்லாமல் வஞ்சனையற்றவுள்ளமுடையவனாய்மாத்திரமிருந்தாலும் அவனால் தத்வார்த்தங்களை எடுத்துரைக்கவியலாதாதலால் அவனுரைப்பவையும் ப்ரமாணமாகக்கொள்ளுமாறில்லை. ஆகையால் வஞ்சனையற்றவுள்ளமும், யதார்த்தஜ்ஞாநமும் ஒருங்குடையவனே ஆப்தனாவானென்பது பெறப்படும்.

"யதாத்ர்த தர்சித்வேஸதி யதாத்ருஷ்டார்த்தவாதித்வம்" "யதார்த்த தர்சித்வேஸதி யதாத்ருஷ்டார்த்தவாதித்வம்" என்று ஆப்தனைக் குறிப்பிடும் லக்ஷணவாக்யமும் இங்கு ஆராயத்தக்கது. இதன் பொருளாவது:— உண்மையைக் கண்கூடாகவறிந்தவனாயிருப்பதோடு அங்ஙனம் உள்ளவாறறியப்பட்ட பொருளைச் சொல்பவன் ஆப்தனாவான் என்பதாம். இவ்வாப்தர்களுள் முதன்மையாக எண்ணப்படும் பெருமை நம்மாழ்வார்பால் நிறைந்துவிளங்கியது. எவ்வாறெனின்; ஒப்புயர்வற்ற ஸர்வேசுவரன் ஆழ்வாரை விசேஷகடாக்ஷஞ்செய்ய அதனால் அவர் 'கொள்ளமாளாவின்பவெள்ள'மாகிய அவனது குணங்களில்மூழ்கி "உண்ணுஞ்சோறுபருகுநீர்தின்னும் வெற்றிலையுமெல்லாம், கண்ணன்......" என்றபடி தாரகபோஷக

போக்யப்பொருளெல்லாம் 'அவனே யாவான்' என்றநுபவித்து அவனியல்பையெல்லாம் உள்ளவாறறிந்தார்.

இங்ஙனம் இவர் தம்மாலறியப்பட்ட ப்ரஹ்மவஸ்து அளவிடவொண்ணப்பெருமையுடையதாயும், "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும், அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே" என்றபடி தெவிட்டாத அமிர்தமாயுமிருப்பதைக்கண்டு 'நாம் மாத்திரமிருந்து அநுபவிக்கத்தக்க விஷயமன்று; நம்மோடு உசாத்துணையாவாரையுஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும்' என்று திருவுள்ளம்பற்றிப் பரோபதேசஞ்செய்யத் தொடங்கினர். இஃதன்றி இவர் ஆசார்யபதவியை வஹிக்கக் கருதியாவது கியாதிலாப பூஜையைக்கருதியாவது உபதேசிக்கத்தொடங்கினரல்லர். இதனாலன்றோ இவர் வாய்மொழி வேதத்திற்கொப்பாக ஆன்றோரால் கையாளப்படுகிறது. இவரும் ஆப்ததமராயும், ப்ரபந்நஜனகூடஸ்தராயும் விளங்கினர்.

மேலும் "அடியையடைந்துள்ளந்தேறி ஈறிலின்பத்திருவெள்ளம் மூழ்கினன் யான்" என்று ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளியதை நோக்குமிடத்து எம்பெருமானுடைய அநுக்ரஹவிசேஷத்தால் இவருக்கு ஹ்ருதயத்தெளிவு மிகநன்றுயமைந்துகிடந்ததென்பது அறியலாகும். இதனால் இவர் வேதமும் 'அறியமுடியாது' என்று பின்வாங்குதற்கு ஹேதுவாகிய பெருமையுடைய ப்ரஹ்மவஸ்துவை "ஆம்வண்ணமின்னதொன்றென்றறிவதரியவரியை, ஆம்வண்ணத்தால் குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த" என்றபடி அறிந்துரைக்கும் ஆற்றலுடையவராயினர். இங்ஙனமிருப்பாரை உலகில்காணுதல் அரிதிலுமரிதாதலால் இவரே ஆப்தருள் சீரியாரென்பது தெளிவாகும்.

ஸ்ரீ:

"அருள்கொண்டாடுமடியவர்" வ்யாக்யானம்.

(120-ம் பக்கத்தொடர்ச்சி.)

அவர்கள் இன்புறச்செய்ததென்னென்னில்; அருளினனவ்வருமறையின்பொருள் மறை என்று, "ஸாஹிஸ்ரீரம்ருதாஸதாம்" "ஸாஹிஸ்ரீ ரம்ருதாஸதாம்" என்று ஸாதுக்களுக்கு அழிவற்ற ஸம்பத்தாய், அல்பச்ருதர் அறியாதபடி அர்த்தத்தை மறைத்துக்கொண்டு "த்ரைகுண்யவிஷயா வேதா:" "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்று கர்மபிர்ம்மோபய ஸதாரணமாயிருக்கின்ற வேத ஸாமாந்யம். மறை என்று, பிர்ம்மபாகத்தை ப்ரசம்ஸிக்கிற உபநிஷத். அருமறை என்று, அதிலும் ஸாரதமாய்சமான ததீயசேஷத்வத்தை ப்ரகாசிப்பிக்கிற சுருதி. 'அவ்வருமறை' என்று சொல்லப்பட்டது. அதாவது:— "தேவமிவாசார்யமுபாஸீத" "ஆசார்யாணாம ஸாவஸா வித்யா பகவத்த:" "தஸ்மாத் ப்ராஹ்மணேப்யோ வேதவித்ப்யோ நித்யம் நமஸ்குர்யாத்" "ஆசார்யாத்தைவ விதிதா வித்யா ஸாதிஷ்டம் ப்ராபத்" "ஆசார்யவாந் புருஷோ வேத" "ஆசார்யஸ்ய ப்ரஸாதேந" "த்வம் ஹி ந: பிதா யோஸ்மாகமவித்யாயா: பரம் பாரம் தாரயஸி" "ஆசார்யவாந் புருஷோ வேத" "ஆசார்யஸ்ய ஸ்நேஹாத்" "ஆசார்யா த்யேவ விதிதா வித்யா ஸாதிஷ்டம் ப்ராபத்" "கரீயாந் ப்ரஹ்மத: பிதா" "ஸஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம" "தேவமிவாசார்யமுபாஸீத" "ஆசார்யாணாம ஸாவஸா வித்யா பகவத்த:" "தஸ்மாத் ப்ராஹ்மணேப்யோ வேத வித்ப்யோ நித்யம் நமஸ்குர்யாத்" "ஆசார்யதேவோபவ" "த்வம் ஹி: பிதாயோஸ்மாகம வித்யாயா: பரம் பாரம் தாரயஸி" "ஆசார்யவாந் புருஷோவேத" "ஆசார்யஸ்துதே கதிம்வக்தா" "ஆசார்யாத்யேவ விதிதாவித்யா ஸாதிஷ்டம் ப்ராபத்" "கரீயாந் ப்ரஹ்மத: பிதா" "ஸஹிவித்யாதஸ்தம் ஜநபதிகச்ரேஷ்டம் ஜந்ம" இத்யாதிகள். இந்த அருமறைப் பொருளையிறே ஆழ்வார் தமக்கு உத்தேசிய

மாக முன் விவரித்தபடி ‘‘பயிலுஞ்சுடரொளி’’ ‘‘நெடுமாற்கடிமை’’ களிலே வெளியிட்டருளியது. அந்த திவ்ய ஸூக்தியையே இவர் தமக்குத் தஞ்சமாக அத்யவஸித்து ப்ரபந்தீகரித்தருளுகிறார்.

முன்புள்ள வ்யாக்யானங்களில் ‘அவ்வருமறையின்பொருள்’ என்றவிடத்தில் அருமறை—பெறுதற்கரியமறை. அதாகிறது:—வேதரஹஸ்யமான உபநிஷத்ரஹஸ்யமிறே என்று அர்த்தமருளிச் செய்தது. இதனுடைய விசேஷமாய் மேற்பாட்டில் ‘வேதத்தினுட் பொருள்’ என்றவிடத்தில் ததீயசேஷத்வ பர்யந்தமான பகவச் சேஷத்வம் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதரஹஸ்யமான உபநிஷத்ரஹஸ்யம் என்ற பதத்துக்கே வேதமென்று த்ரைகுண்ய விஷயமான வேதஸாமாந்யத்தைச் சொல்லித் தத்ரஹஸ்யமான உபநிஷத் என்கையாலே ‘‘𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌃’’ ‘‘வேதைச்ச ஸர்வை: அஹமேவவேத்ய:’’ என்ற பகவத்பரதையைச் சொல்லி தத்ரஹஸ்யமென்கையாலே ததீயசேஷத்வரூபமான அர்த்தத்தைத்தான் சொல்லுகிறது. அதற்கேற்ப இந்தப்பாட்டில் அ அருமறை, என்று மூன்று பர்வஞ்சொன்ன ஸ்வாரஸ்யம் ஏற்பட்டிருக்கிறது. அதுக்குமேலே இன் என்றதால் இனிமைப்பொருளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வாரஸ்யத்தையிட்டு முன் சொன்னபடி இப்பாட்டில் அர்த்தம் தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. எப்படியானாலும் முன் வ்யாக்யாதாக்கள் திருவுள்ளத்திற்கிசைந்த அர்த்தமே இதுவென்பதில் ஸந்தேஹமில்லை. பெரியோர்கள் ஆலோசித்துக்கொள்ளலாம்.

இஞ்ச அருள்கொண்டாடுமடியவரின்புற, அருளினனவ்வருமறையின்பொருள் என்று இப்படியானால் ததீயசேஷத்வ நிஷ்டையாகிற வேதரஹஸ்யார்த்தத்தை என்று ஸாமாந்யேந லோகத்திற்குபகரித்தமைசொல்லுகிறது. வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான் என்று அந்த விசேஷார்த்தத்தைத் தம்முடைய நெஞ்சில் ஸ்தாவர ப்ரதிஷ்டையாக்கித் தமக்கு விசேஷமாய் உபகரித்தமை சொல்லுகிறது. ஆகலால் முன்பாட்டே புரோவாதமாகையாலே ப்ரதானமென்றும் பிற்பாட்டு அநுவாதமாதலால் அதுக்கு விவரணமாயிருக்குமென்றும் பெரியோர்கள் தெரிந்து கொள்ளலாம்.

கிஞ்ச அருள்கொண்டாடுமடியவரின்புற, அருளினனவ்வரு மறையின்பொருள் என்று இப்பாட்டில் ததீயசேஷத்வ நிஷ்டையாகிற வேதரஹஸ்யார்த்தத்தை ஸமாந்யேந லோகத்துக்குபகரித்தமை சொல்லி மேல்பாட்டில் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினன் என்று அந்த விசேஷார்த்தத்தைத் தம்முடைய நெஞ்சுள் ஸ்தாவர ப்ரதிஷ்டையாக்கித் தமக்கு விசேஷகமாக உபகரித்தமை சொல்லுகிறது. "ஸவிஜ ஜநாதாய ஸஹ்ரு ஶாதாய" "அகிலஜகந்மாதாரம் அஸ்மந்மாதரம்" என்றும் "ஸவிஜ ஜநஸ்வாமிநு ஸஸ்ஸ ஸ்வாமிநு" என்றும் உரைத்தனபோலே. ஆகலால் முன்பாட்டே பூர்வவாதமாகையாலே ப்ரதாநமென்றும் பிற்பாட்டு அநுவாதமாகையாலே அதற்கு விவரணமென்றும் பெரியோர்கள் தெளிந்துகொள்ளலாம்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு உபயவேதாந்த வித்வான்
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(140-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனிமேல் ப்ரஹ்மவித்யாநிஷ்டனுடைய பலம் நிரூபிக்கப்படுகிறது. ப்ரஹ்மவித்யையாவது பக்தி ப்ரபத்திகள். அவற்றுள் பக்தியாவது தஹரவித்யை முதலிய பேதத்தாலே பலவகையாம். இன்னும் அந்த பக்தியே உபாயபக்தியென்றும், பலபக்தியென்றும், அதிகாரபக்தியென்றும் பஹுவிதமாயிருக்கும்.

அதில் உபாயபக்தியாவது, மோக்ஷஸாதநமாக உபாஸகர்களால் அநுஷ்டிக்கப்படும்தான நிரந்தரஸ்ம்ருதிரூபமான ஜ்ஞானவிசேஷம். பலபக்தியாவது ப்ரபந்நர்களுக்கு போஜநக்ஷுந்ந்யாயத்தாலே

சரீரவியோகாநந்தரம் அநுபவத்துக்கு உபகாரணமான அபிநிவேசம் இது ப்ரபத்திபலமாய்வருமதாகையாலே பலபக்தியென்று வழங்கப் படும்.

அதிகாரபக்தியாவது 'மயர்வறமதிநலமளினன்' என்கிறபடியே பகவத் கடாக்ஷவிசேஷத்தாலே ஆழ்வார்களுக்குக்கிடைத்த ப்ரேம ரூபாபந்நமான ஜ்ஞானவிசேஷம். இந்த ப்ரேமவிசேஷத்தாலே "காலாழும் நெஞ்சழியும்" என்கிறபடியே கரணசைதல்யம் பிறந்து 'அடைவுபட உபாயாந்தரங்களை அநுஷ்டிக்கமுடியாமையாலும் தியாஜ்யமானஸம்ஸாரத்தினுடைய கொடுமையை அநுஸந்திப்பதாலும், ப்ராப்யமான ப்ரஹ்மாநுபவாலாபத்தாலே உண்டான க்லேசத் தாலேயும் அவிளம்ப்யபலப்ரதமான ஸித்தோபாயத்தைப் பரிக்ர ஹிக்கையாகிற ப்ரபத்திக்கு அதிகாரமாயிருக்கும்.

இப்படியே ப்ரபத்தியும் பஹுப்ரகாரையென்று கீழ்நிரூபிக் கப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு பலம் பகவதநுபவம், அநுபவ ஜநிதப்ரீதிகாரித கைங்கர்யம், கைங்கர்ய ஜனிதபகவந்முகோல்லா ஸம், இவைகளும், இவைகளுடைய சரமபர்வமாகவருகிற ஆசார்ய பாகவதஅநுபவ கைங்கர்யங்கள் முதலானவையுமாம்.

பக்தர்களுக்கு அநுபவமே புருஷார்த்தமென்றும், ப்ரபந்நர் களுக்கு கைங்கர்யமே புருஷார்த்தமென்றும் சொல்லப்படும். இந்த அநுபவ கைங்கர்யங்களும் பாரார்த்த ஸ்வார்த்தபேதத்தால் வேறு பட்டுமிருக்கும். ஆனால் "யெநயெநயாதாஹ்யூதி கூாஜோஹூாகா8 ரூவ்ாநுஹஸூாந" "யேநயேநயாதாகச்சதிகாமாந்நுகாமரூப்ய நுஸஞ்சரந்" இத்யாதிசுருதிகளாலே ப்ரஹ்மவித்யாஸாமாந்யத்துக்கு கைங்கர்யமே பலமாகச்சொல்லியிருப்பதால் இதுகூடும்படி எங்ஙனே என்னில்; இருவர்களுக்கும் அநுபவகைங்கர்யங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், "ஹெகெூ-ூாமவெ தஸூஹ" "பக்தைர்ப்பாகவதைஸ் ஸஹ" "வைகுந்தத்தமரும் முநிவரும் வியந்தனர்" என்கிற ப்ர மாணங்களின்படி அநுபவநிஷ்டர்கள், கைங்கர்யநிஷ்டர்கள் என்று ப்ரகாரபேதம் ஏற்பட்டிருப்பதால் பக்தனுக்கு அநுபவத்தாலே யுண்டான ப்ரீதியாலே ஏற்படுகிற கைங்கர்யமானது அந்த திசையி

லேற்படுகிற அநுபவவிசேஷத்திற்கு ஸாதநமாய்க்கொண்டு அப்ரதாநமாயிருக்கும்.

ப்ரபந்நனுக்கு த்வயமே சரணமந்த்ரமாகைபாலே அதில் உத்தர வாக்யத்தில் சொல்லுகிறபடி கைங்கர்யமே பலமாக, தத்க்ருதங்யர் யத்தாலே ஏற்படுகிறபடியால் அந்த கைங்கர்யத்துக்கு அநுபவம் ஸாதநமாயிருக்கும். அநுபவத்தாலேயுண்டான ப்ரீதியானது கைங்கர்யத்திலேமூட்ட அந்த கைங்கர்யமே பரமபுருஷார்த்தமாயிருக்கும். இவனுக்கு கைங்கர்யஸாதநமாக அநுபவமேற்படும்.

இப்படி, ப்ராதாந்யாப்ராதாந்ய பேதத்தாலே அதிகாரி வ்யவஸ்தைகூடும். இத்தையநுஸரித்தே ஸ்ரீவசநபூஷணத்திற்குத் திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யானத்தில் பலபேதமில்லை என்பதற்கும் உபபத்தியேற்படும்.

இப்படி அதிகாரிபேதமிருந்தபோதிலும், ஆனந்த தாரதம்யமில்லை. அது எப்படியென்றால் ஈசுவரனுக்கு ஜகத்வ்யாபாராதிகளாலே உண்டான ஆனந்தமும், பிராட்டிமார்களுக்கு தாங்கள் பத்நீமுறையாலுண்டாகிற ஆனந்தமும், பெரியதிருவடி முதலானவர்களுக்கு வாஹனம், சயநம் முதலானவையாக இருக்கிறதாலுண்டான ஆனந்தமும், வெவ்வேறாயிருந்தபோதிலும் ஆனந்த தாரதம்யமில்லையென்பதுபோல் இதுவுங்கூடும்.

நித்யர்கள், முக்தர்கள், பிராட்டிமார், ஈசுவரன் இவர்களுக்கு ஆனந்தம் வெவ்வேறாயிருந்தபோதிலும், ஈசுவரன் ஸர்வ ஸ்வாமியாகையாலே அவனுக்குண்டாகிற ஆனந்தம் தங்களுடையதாயுமிருக்கும். மற்றவர்கள் பரஸமர்த்தைகப்ரயோஜனர்களாகையாலே தங்களுக்குவருகிற ஆனந்தம்போல் மற்றவர்களுடைய ஆனந்தமும் தங்களுடையதாகவேயிருக்கிறபடியால் ஆனந்தம் அவிசிஷ்டமாயிருக்கும். இந்த விஷயம் "ஸோऽச்நுதே ஸர்வான் காமான்" "போகமாத்ர ஸாம்யலிங்காச்ச" என்கிற ஸூத்ரஸித்தம். ஆகலால் கைங்கர்ய நிஷ்டர்களோடு அநுபவநிஷ்டர்களோடுவாசியற எல்லார்க்கும் ஆனந்தம் துல்யம்.

அநுபவகைங்கர்யங்கள் ஸ்வார்த்தங்களாயும், பரார்த்தங்களாயுமிருக்கும். ஸ்வார்த்ததையாவது, அநுபவகைங்கர்யங்களாலுண்டாகிற போகத்தில், தங்களுக்கு அப்ராதாந்யமும் ஈசுவரனுக்கு ப்ராதாந்யமும் ஏற்படுகை.

போகமாவது:—நிருதார்த்ததாபுத்தி. அவற்றுள் பரார்த்ததையாவது, இவைகளாலுண்டாகிறபோகம் ஈசுவரனுக்கேயாக தங்களுக்கு சைதந்யகார்யமாய் அவகாதஸ்வேதம்போலே ஆநுஷங்கிகமாயாவது, ஈசுவரனுடைய போகாதிசயாதானேச்சையாலாவதுவருகிற போகத்தில் தங்களுக்கு அந்வயமில்லாமை. தங்களுடைய அநுபவகைங்கர்யங்களாலுண்டாகிற பகவந்முகோல்லாஸாநுபவமே இவர்களுக்கு புருஷார்த்தம். இந்த விஷயம், திருமந்த்ரத்தில் 'நாராயணாய' என்கிற வ்யக்த சதுர்த்தியோடு அந்விதமான நம: பதத்தால் ஏற்படுகிறது. அது எப்படியென்றால் அந்த வ்யக்தசதுர்த்தி "தாதர்த்யேசதுர்த்தி" என்கிற அநுசாசனத்தால் தாதர்த்யவாசியாக ஆகிறது. அந்த தாதர்த்யமாவது சேஷத்வம். கீழ்ப்ரணவத்தில் லுப்தசதுர்த்தியாலே சேஷத்வம் சொல்லப்பட்டிருப்பதால் இந்த சதுர்த்தியில் 'நாகிஞ்சித்குர்வத: ஶேஷத்வம்' 'நாகிஞ்சித்குர்வத: சேஷத்வம்' என்கிற ந்யாயத்தால் கிஞ்சித்காரமில்லாதபோது சேஷத்வம் ஸித்தியாமையால் சேஷவ்ருத்தியைச் சொல்லுகிறது.

அவ்விடத்தில், லுப்தசதுர்த்தியில், 'அஸ்மி' என்று அத்யாஹரித்துக்கொள்ளவேண்டியதாகையாலே சேஷத்வ ஸ்வரூபயோக்யதையைச் சொல்லுகிறது. இவ்விடத்தில் அந்த சேஷத்வபலோபதாநத்தைச்சொல்லி, அது அஸித்தமாகையால், 'ஸ்யாம்' என்று கிரியையினுடைய அத்யாஹாரத்தாலே அந்த பலோபதாந ப்ரார்த்தனையைச் சொல்லுகிறது.

இப்படி ப்ரார்த்தனையைச்சொல்லுவதால் கைங்கர்யம் ப்ரார்த்தநீயமென்று கிடைக்கிறது. சேஷத்வம் பஹுபதார்த்த கடிதமாகையால், அந்தப் பதஸமபிவ்யாஹாரத்தாலே சேஷத்வம் கிடைக்கிறது. அதில் சதுர்த்தியினுடைய அர்த்தம் இச்சை. அந்த இச்சாவிஷயத்வம் ஸித்தவஸ்துவுக்குக்கூடாமையால், அதிசயவிசிஷ்டனான நாராயணனை விஷயமாக உடைத்தாயிருக்கிறது.

அப்படியே, ‘ஸ்யாம்’ என்கிற இடத்திலேயும், வேதநத்துக்கு வ்யாபாரவிசிஷ்டவேஷேண இச்சாவிஷயத்வம் சொல்லுகிறது. ஆகையால் சதுர்த்தியர்த்தமான இச்சையில், ப்ரகிருத்யர்த்தமான நாராயணபதார்த்தம். விஷயதாஸம்பந்தேந இச்சையில் அந்விதமாய் அப்படி நாராயண பதார்த்தாந்விதமான இச்சை ஜந்யதாஸம்பந்தேந, ‘வ்யாபாரவிശிഷ്ട ജീവപദാൎത്ഥകൎത്തൃകവ്യാപാരத்தில் அந்வயிக்கிறது. ஆக, “അതിശയവിശിഷ്ട നാരായണവിഷയക ഇച്ഛാജന്യ വ്യാപാരവിശിഷ്ടഃ സ്യാം” “அதிசயவிசிஷ்ட நாராயணவிஷயக இச்சாஜந்ய வ்யாபாரவிசிஷ்ட: ஸ்யாம்” என்று போதம் ஏற்படுகிறபடியால், “പരഗതാതിശയാധായകവ്യാപാരവിശേഷരൂപശേഷവൃത്തിപ്രാൎത്ഥനാ” பரகதாதிசயாதாயகமான வ்யாபாரவிசேஷரூப சேஷவ்ருத்தி ப்ரார்த்தனை ஏற்படுகிறபடியால், இந்த சேஷ வ்ருத்தி, ப்ரார்த்தனு விஷயம் என்றேற்படுகிறது.

அதில் மத்யமபதமான நம: பதத்தினுடைய அர்த்தமானது காகாக்ஷிந்யாயத்தால், ப்ரணவத்திலும், ஸ்வஸ்தாநத்திலும், வ்யக்த சதுர்த்தியிலேயும், அந்விதமாகிறது. அதில், நம: ஸ்யாம், என்று, அத்யாஹ்ருதமான ஸ்யாமென்கிற க்ரியாபதத்தோடு சேர்ந்தந்வித மான நம: பதமானது ‘அதிசயவிசிஷ்டமாயிருந்துள்ள அஸ்மத் சப்தார்த்தவிஷயக இச்சாஜந்ய வ்யாபாரவிசிஷ்ட: நஸ்யாம்’ என்றேற்படுகிறது.

இத்தால் ஸ்வாதிசயாதாயக வ்யாபாரம் அபுருஷார்த்தமாய் பகவததிசயாதாயக வ்யாபாரமே புருஷார்த்தமாக ஏற்படுகிறது. இப்படி ஏற்படுகிறபடியால் தனக்கு பகவதநுபவ கைங்கர்யங்களில் உண்டாகிறபோகத்தில் அந்வயமிருக்குமாகில் அந்த போகரூபமான ஸ்வாதிசயாதாயக வ்யாபாரம் இவனுக்கு ஏற்படுகையால், இந்த ப்ரார்த்தனை கூடாது. ஆதலால் சைதந்யகார்யமாய் தனக்குவருகிற போகம் பகவத்போகாதிசயாதாயகமாய்க்கொண்டு உத்தேசியமாகிறது.

தொடரும்.

ஸ்ரீ:

பிராட்டி அசோகவனத்திலிருப்பு.

இராவணன்செய்த வஞ்சனையால் சீதாபிராட்டியார் சக்ரவர்த்தித்திருமகனாகிய ராமபிரானைவிட்டுப்பிரிந்து அசோகவனத்தில் எழுந்தருளியிருந்ததில் சில ரஹஸ்யப்பொருளறியக்கிடக்கின்றனவென்று நம்பூர்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ளார்கள். அவையாவன;—

ப்ரபன்னன் ஸம்ஸாரமண்டலத்திலிருக்குமிருப்பைப் பிராட்டி அசோகவனத்திலிருந்து காட்டினாள். எவ்வாறெனின்; பிராட்டிக்கு இராவணனுடைய ஸம்பந்தம்போலே ஸ்ரீவைஷ்ணவனுக்கு உடம்பொடு ஸம்பந்தமாம். அஃதாவது:— ராவணஸம்பந்தம் பிராட்டிக்குப் பொறுக்கமுடியாத துன்பத்தை விளைவித்ததுபோல ஸ்ரீவைஷ்ணவன் தன்னுடம்பைக்கண்டால் சத்ருவைக்கண்டாற்போலக்கருதி மிக்கதுன்பத்தை விளைப்பிக்கடவதாகிய இதன் ஸம்பந்தம் எப்பொழுதகலுமோவென்று எதிர்பார்க்கக்கடவனென்பதாம். இதுபற்றியே திருமங்கைமன்னனும் "பாம்போடொருகூரையில் பயின்றாற்போல" என்றருளிச் செய்தார்.

பிராட்டிக்கு ஏகாக்ஷி ஏககர்ணி என்ற ராக்ஷஸிகள்போல ஸ்ரீவைஷ்ணவனுக்கு அஹங்கார மமகாரங்களாம். அஃதாவது:— ஏகாக்ஷி ஏககர்ணி என்ற ராக்ஷஸிகள் அதட்டியும், வசவுரைபயின்றும் பிராட்டியைத் துன்பத்திற்குள்ளாக்கியதுபோல அஹங்கார மமகாரங்கள் பிறவிக்குவித்தாய்நின்று துன்பத்திற்குள்ளாக்குமென்பதாம். இதனாலன்றோ ஆழ்வாரும் "நீர்நுமதென்றிவை, வேர்முதல் மாய்த்துஇறை, சேர்மின்உயிர்க்குஅதன், நேர்நிறையில்லே" என்று அருளிச்செய்தார். பிராட்டி ராமபிரானைவிட்டுப் பிரிகைக்குத்தோன் மாரீசனைப்போல ஸ்ரீவைஷ்ணவனுக்கு விரோதியாய்த்தோற்றின இதரவிஷயத்தின் ஆசையாம். அஃதாவது:— மாரீசனாகிய மாயமானிடத்தில்வைத்த ஆசை பிராட்டி ராமபிரானைவிட்டுப் பிரிவதற்குக் காரணமாயிருந்ததுபோல இதரவிஷயப்பற்று எம்பெருமானையடைவதற்குத் தடையாயிருக்குமென்றறியத் தக்கது.

பிராட்டிக்குத் தன்னை ஹிம்ஸைசெய்த ராக்ஷஸிகளின் ஸம்பந்தம்போலே ஸ்ரீவைஷ்ணவனுக்குப் புத்ரமித்ராதிகளின் ஸம்பந்தமாம். அஃதாவது:— ராக்ஷஸிகளின் ஸம்பந்தம் பிராட்டிக்குத் துன்பத்திற்குடலாயிருந்ததுபோல புத்ரமித்ராதிகளின் ஸம்பந்தம் துன்பத்தை விளைக்குமதாயிருக்குமென்பதாம். இதுபற்றியே திருமங்கைமன்னனும் "தாயே தந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றும், நோயேபட்டொழிந்தேன்......" என்றருளிச்செய்தார். பிராட்டிக்குத் திருவடி (ஹநுமான்) தோற்றவுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யன் தோற்றமாம். அஃதாவது:— பிராட்டிக்கு ஹநுமானுடையகாட்சி நன்மையைப்பயந்ததுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யதரிசனம் நன்மையைப் பயக்குமென்பதாம். பிராட்டிக்குத்திருவடியாலுரைக்கப்பெற்ற ராமகுணங்கள்போல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆழ்வார் அருளிச்செயல்களாம். அஃதாவது:— திருவடியுரைத்த ராமகுணங்கள் பிராட்டிக்குக் கர்ணாம்ருதமாகவும், தாரகமாகவும் இருந்தனபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆழ்வார்களருளிச்செயல்களே போக்யமாகவும் தாரகமாகவுமிருக்குமென்பதாம். "கேட்டாருர்வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்" என்றும், 'தொண்டர்க்கமுதுண்ண' என்றும், "பாவினின்னிசை பாடித்திரிவனே" என்றும் அருளிச்செய்ததினால் அருளிச்செயல் இனிமையைப்பயப்பதாயும் தாரகமாயுமிருக்கு மென்பதறியலாம்.

> தித்திக்குமூலத்தெளியமுதேயுண்டுதெய்வமென்பார்
> பத்திக்குமூலம்பனுவற்குமூலம்பவமறுப்பார்
> முத்திக்குமூலமுளரிக்கைவாணகைமொய்குழலா
> ரத்திக்குமூலங்குருகைப்பிரான்சொன்னவாயிரமே.

என்று கம்பரும் உரைத்தார்.

பிராட்டிக்குத் திருவாழியின் வரவுபோலே ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யன் ப்ரஸாதித்த குருபரம்பரையாம். அஃதாவது:— பிராட்டிக்குத் திருவாழி மோதிரம் எங்ஙனம் ப்ராப்தமாயிற்றோ அதுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு *குருபரம்பரை ஆசார்யனால் ப்ராப்தமாகும் என்பதாம்.

---

* குருபரம்பரையாவது:— திருமந்த்ரோபதேசத்திற்குமுன்பு ஆசார்யனால் உபதேசிக்கப்படுகிற வாக்யகுருபரம்பரையாம்.

பிராட்டிக்குத் திருவாழிமோதிரம்போலே ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யன் ப்ரஸாதித்த திருமந்த்ரமாம். அஃதாவது:— திருவடியால் கொடுக்கப்பெற்ற திருவாழிமோதிரம், பிராட்டிக்கு ஸம்சயமகன்று தெளிவுண்டாதற்குக் காரணமாயிருந்ததுபோல ஆசார்யனாலுபதேசிக்கப்பட்ட திருமந்த்ரத்தினால் ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஸம்சயவுணர்வகன்று தெளிவுபிறக்குமென்பதாம். இத்திருமந்த்ரத்தால் தெளிவுணர்வுபிறக்குமோவென்னில்; இதன்பொருளை யாராயவே ஆத்மா தனக்கும் பிறர்க்கும் உரியதாகாது ஸர்வரக்ஷகனான எம்பெருமானுக்கே அடிமையாயிருக்குமியல்பினையுடையதாய் அவன்விஷயமான கைங்கர்யமே தனக்குப் புருஷார்த்தமாகக்கொண்டிக்குமென்பதறியலாகுமாதலால் தெளிவுணர்வுபிறக்குமென்க.

பிராட்டி திருவாழியைத் தன் அவயவங்களிலே ஒற்றிப் போற்றித் தரித்ததுபோல ஸ்ரீவைஷ்ணவன் ஆசார்யனருளிச்செய்த திருமந்த்ரார்த்தாநுஸந்தானஞ்செய்து தரிக்கக்கடவன். அஃதாவது:— பிராட்டி திருவாழிமோதிரத்தைக்கண்டு,

இழந்தமணிபுற்றாவெதிர்ந்ததெனலானாள்
பழந்தனமிழந்தனபடைத்தவரையொத்தாள்
குழந்தையையுயிர்த்தமலடிக்குவமைபூண்டாள்
உழந்துவிழிபெற்றதொருயிர்ப்பெறையுமொத்தாள்.

என்றபடி அளவிடவொண்ணாத ஆநந்தமுற்று அதைத் தன் உத்தமாவயவ முதலியவைகளில் ஒற்றிக்கொண்டு உயிர் தரித்ததுபோல ஸ்ரீவைஷ்ணவன் தன் ஆசார்யன் அருளிச்செய்த திருமந்த்ரார்த்தாநுஸந்தானத்தால் ஸர்வேசுவரனே உபாயோபேயமாவானென்று திடமான உணர்ச்சியுற்று உயிர்தரிக்கக்கடவனென்பதாம். இதனால் ஸ்ரீவைஷ்ணவனுக்குத் திருமந்த்ரார்த்தாநுஸந்தானமே உத்தேசியமாகுமென்பது தெளிவாம். இதுபற்றியே லோகதேசிகனும் "வாசகத்திற்காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கடி ஈசுவரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை" என்று அருளிச்செய்தார்.

பிராட்டி இளையபெருமாளை (லக்ஷ்மணனை)க் கோபித்துக்கூறிய வார்த்தையினால் ஸ்ரீராமபிரான் திருவடியைவிட்டுப்பிரிந்ததுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்குப் பாகவதாபசாரமாம். அஃதாவது:— ஸ்ரீராமபிரான் இளையபெருமாளைப் பிராட்டிக்குத் துணையாகவைத்துவிட்டுத் தாம் மாயாமிருகத்தின்பின் சென்றகாலத்தில் மாயாமிருகம் ராமபாணத்தால் தாக்குண்டு உயிர்துறக்கின்றபோது ஹா லக்ஷ்மணா! ஹா சீதே!! என்று கூக்குரலிட்டது. அவ்வோசையைக்

கேட்ட பிராட்டி மனக்கலக்கமுற்று இளையபெருமாளை நோக்கி என் ப்ராணநாயகரின் நிலைமையை ஆராய்ந்து வருவீராக என்று கட்டளையிட அதற்கு இளையபெருமாள் ராமபிரானுடைய பராக்கிரமத்தை எடுத்துரைத்துத் தேறுதல்கூறியவிடத்திலும் அதைச் செவிக்கொளாது பிராட்டி இளையபெருமாளை நிஷ்டுரமொழிகளைப் புகன்றதினால் ராமபிரானைவிட்டகன்றிருக்கும்படி நேர்ந்தது. அது போல ஸ்ரீவைஷ்ணவன் பாகவதாபசாரப்படுவானாகில் எம்பெருமானுடைய நிக்ரஹத்திற்கிலக்காகி ஒருபோதும் ஈடேறமாட்டானென்பதாம். இதுபற்றியே லோகதேசிகனும் "ஜ்ஞாநாநுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள்பக்கல் சம்பந்தமே அமைகிறாப்போலே இழவுக்கு அவர்கள்பக்கல் அபசாரமேபோரும்" என்று அருளிச்செய்தார். இதனால் பாகவதாபசாரம் மிகவும் க்ரூரமுடையதென்றும், அது வாராமல் காத்துக்கொள்ளவேண்டியதே ஸ்ரீவைஷ்ணவர்களின் கடமையாகுமென்பதும் பெறப்படும்.

பிராட்டிக்கு விரோதிகளான ராவணாதி ராக்ஷஸர்களை ராமபிரான் துணித்துப் பிராட்டியைத் திருவயோத்திக்கு அழைத்துச் சென்றதுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அடியோடறுத்து இவனைப் பரமபதத்திற்சேர்த்து நித்ய முக்தருக்குச் சமமாக நித்ய கைங்கர்யத்தைக் கொண்டருள்வான். அஃதாவது:— பிராட்டி தனக்கு விரோதிகளாயிருந்த ராவணாதி ராக்ஷஸர்களை வேரறுப்பதற்குத் தானொரு முயற்சிசெய்யாதிருக்க ராமபிரான் அவ்விரோதிகளையடியோடறுத்துப் பிராட்டியை அழைத்துக்கொண்டதுபோல ஸ்ரீவைஷ்ணவன் கர்ம ஜ்ஞாந பக்திகளை மோக்ஷஸாதனமாகக்கொள்ளாமல் ஓர் பற்றின்றி எம்பெருமானையே உபாயோபேயமாகக்கொண்டு நிர்ப்பரனாயிருப்பானாகில் ஸர்வேசுவரன் தன்னையடையவொட்டாமல் தடுத்துக்கொண்டிருந்த இவனது பாபங்களையெல்லாம் அடியோடொழித்துத் தன் திருவடியிற் சேர்த்துக்கொள்வானென்பதாம். இதுவிஷயத்தை "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:" "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:" என்று கண்ணபிரான் சரமச்லோகத்தில் உத்ரவாக்யத்தில் அருளிச்செய்தான்.

———

166

ஸ்ரீ:

நாரணபுரம்,

எம்பெருமானார் தரிசன ஸபையின்

முதல் வருஷோத்ஸவம்.

இவ்வூர் கோயமுத்தூர் ஜில்லா தாராபுரம் தாலுகா பொன்னு புரம் என்ற கிராமத்திற்கு அருகிலுள்ளது. இச்சபை இவ்வூரி லுறைவோராகிய வைஷ்ணவப்பற்றும், நல்லொழுக்கமும் ஒருங் கமையப்பெற்ற ஆஸ்திகர்களால் ஸ்தாபிக்கப்பெற்றது. இது இவ்வூர் அழகிய சிங்கப்பெருமாள் ஸந்நிதிக்கு அணித்தாக நிறுவப்பெற் றுள்ள இராமாநுஜகூடத்தில் நிலவுகிறது.

இச்சபையின் முதல்வருஷோத்ஸவம் நாளது பிரபவஹ வைகாசிமீ 30உ (12—6—27) ஞாயிற்றுக்கிழமையன்று ஈரோடு ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸதாத்தாசார்யஸ்வாமியின் அக்ராஸநாதிபத் யத்தில் நடைபெற்றது. அப்பொழுது பாகவதகோஷ்டியார் கான ரூபமாக மங்களவாழ்த்துக்கூறியபின் அக்ராஸநாதிபதி இவ்வூர் வாசிகள் தொன்றுதொட்டே வைஷ்ணவர்களாவார்கள் என்ற உண்மை இவ்வூரின் பெயரைக்கேட்டமாத்ரத்தானே அறியலாகும் என்பது முதலாகப் பலவின்னுரைகள் முன்னுரையாகக்கூறி முடித் தனர். அதன்பின் வைஷ்ணவச்சிறுர் இருவர் ‘ஆஸ்திகநாஸ்திக ஸம்வாதம்’ என்ற விஷயத்தைக்குறித்து எல்லோரும் தெளிவாயறி யும்படி ஸம்வாதரூபமாக உபந்யஸித்துமுடித்தனர். அதன்மேல் ஸ்ரீமாந், சடகோப நாயுடுகாரு ‘பக்தி’ என்ற விஷயத்தைக்குறித்து மிகவும் தெளிவாகப் பலஹேதுக்களால் நிரூபித்து ஆந்திரபாஷை யில் உபந்யஸித்தார். பின்னர் ஹரிஸமய திவாகரப் பத்திராதிபர் ‘அருளிச்செயல்’ என்ற விஷயத்தைக்குறித்து மிகவும் நன்றாக உபந்யஸித்துமுடித்தபின் அக்ராஸநாதி உபந்யாஸகருரைத்த விஷ யங்களின் ஸாராம்சங்களைச் சுருக்கமாக எடுத்துரைத்து முடிவுரை கூறினர். அதன்மேல் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற ஸபை பூர்த்தியுற்றது

அன்று இராத்திரி ஜ்ஞாநாநுஷ்டான ஸம்பந்நராகிய ஸ்ரீமாந் நம்பெருமாள்ராமாநுஜ தாஸரவர்கள் ‘ப்ரஹ்லாதாழ்வான்சரித் திர’த்தைக் கானரூபமாக யாவரும் மகிழும்படி பிரசங்கஞ்செய்தார். அப்பொழுது கோஷ்டிவிநியோகம் வழங்கப்பெற்ற ஸபை இனிது நிறைவேறியது.